ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 4
இதழ் : 6

செய்திமலர்

ஏப்ரல் 2008

## யேகோவா நிசி



ஜெயங்கொடுக்கும் தேவன் உங்களோடு இருக்கிறார்.

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்




இந்த ஊழியரின் பெயர் நான்சிங் சௌகான். மத்தியபிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டம் தொல்வானி கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் இயேசுவைப் பற்றி அறிவதற்கு முன்னதாக உலகப் பொருட்களின்மேல் ஆசையுடையவனாய், பெரிய குடிகாரனாய், கள் மற்றும் பீடி குடித்துக் கொண்டும் குட்கா சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார். விக்கிரகங்களுக்கு பூஜை செய்து வழிபட்டு வந்தார். அந்த சமயத்தில் அவருடைய வாழ்க்கை எப்பொழுதும் சமாதானம் இல்லாமல் துக்கம் நிறைந்ததாய் இருந்தது. அப்பொழுது அவர்கள் கிராமத்திற்கு ஜாக்கிர் என்ற ஒரு ஊழியர் வந்து இயேசுவைப்பற்றிக் கூறினார். இவர்கள் குடும்பத்திற்காக விஷேசமாக ஜெபித்தார். இயேசு இவர்கள் குடும்பத்தை துக்கத்திருந்து விடுவித்து இருதயத்தை சமாதானத்தினால் நிரப்பினார். கர்த்தர் இவர்கள் குடும்பத்தை ஆசீர்வதித்தார். இவர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு தேவனை ஆராதித்து வந்தார்கள். பின்பு தேவன் இவருக்கு ஒரு தரிசனம் கொடுத்தார். அந்த தரிசனத்தில் உன்னுடைய கிராமத்தில் ஊழியத்தை ஆரம்பித்து நிறைவேற்று என்று தேவன் கூறினார். அதோடுகூட அவருக்கு அதற்கான ஞானத்தையும் வல்லமையையும் அருளினார்.

இவரும் இவருடைய குடும்பமுமாக ஊழியம் செய்ய அர்ப்பணித்தார்கள். இப்போது தெல்வானி என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார். ஞாயிறுதோறும் இவர்கள் கூடி தேவனை ஆராதித்து வருகிறார்கள். இவருடைய ஊழியத்திற்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இவரை தாங்குபவர்: Immanuel Prayer Ministry - Valparii.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பு வாழ்த்துக்கள்.

மரித்தேன் ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன் என்று உயிர்த்தெழுந்த இயசே "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்". என வாக்குப்பண்ணி நம்மை நடத்தி வருகிறபடியால் தேவனை துதிப்போம்.

மார்ச் மாதம் முழுவதும் ஊழியத்தில் தேவன் கூட இருந்தார். பணித்தளத்திற்கு வந்த அனைவரையும் தேவன் பாதுகாத்தக் கொண்டார். எல்லாக் கூட்டங்களையும் ஆசீர்வதித்தார். குஜாத், ஹிரோலா கிராமத்தில் சுவிஷேசத்திற்கு விரோதமாக சிலர் எழும்பி ஆலயத்தில் உள்ள பொருட்களை சேதப்படுத்தினார்கள். இந்தக் கிராமத்திற்காக ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

கர்த்தருக்குச் சித்தமானால் ஏப்ரல் மாத இறுதியில் தெரிந்துகொள்ளப்பட்ட 100 சுதேச ஊழியர்கள் முதன் முறையாக போதகர்களாக அபிஷேகம் செய்யப்பட உள்ளார்கள். அதற்காக அந்த 100 ஊழியர்களுக்கு சிறப்பு போதகர் பயிற்சி ஏப்ரல் 7–12 வரை 6 நாட்கள் ஆனந்த் பட்டணத்தில் நடத்த உள்ளோம். தமிழ்நாட்டி–ருந்து மூத்த போதகர்கள், ஊழியர்கள் வந்து இந்த பயிற்சி கொடுக்க உள்ளார்கள். முகாமிற்கான உணவு ஏற்பாடு, போக்குவரத்து செலவுக்காக ரூ. 2 இலட்சங்கள் தேவை. பயிற்சி முகாம், ஆராதனை சிறப்புடன் நடைபெறவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

நம் தேவன் யெகோவாநிசியாக இருந்து உங்கள் வாழ்க்கையில் ஜெயத்தைக் கொடுப்பாராக!

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**



# யெகோவா நிசி

சிறப்பு செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

***அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோட யுத்தம் பண்ணினார்கள். யாத். 17:8.***

மேற்கண்ட வேதபகுதியில் அடிமைத்தன வீடாகிய எகிப்தி–ருந்து ஜனமாகிய இஸ்ரவேலரை மீட்டு ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்திற்கு தேவன் அழைத்துச் செல்லும்போது நடந்த யுத்தத்தைக் குறித்து வாசிக்கிறோம். இதில் மூன்று காரியங்களை நாம் தியானிப்போம்.

**அழைத்த உடன்படிக்கையின் தேவன்**

சர்வ வல்லமையுள்ள தேவன் ஆபிரகாமிற்கு தரிசனமாகி வாக்குத்தத்தங்களைக் கொடுத்து உடன்படிக்கை செய்தார். அதன்படி இஸ்ரவேல் ஜனத்தை 430 வருடங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்தி–ருந்து விடுவித்தார். தேவனுடைய வேளை வந்தபோது அவரே வந்து இறங்கினார். இதை வாசிக்கும் அன்பானவர்களே, ஒருவேளை தேவன் வாழ்வில் சில கஷ்டங்களை, நிந்தனைகளை ஏன் இன்னும் அனுமதிக்கிறார் என்று வேதனையுடன் இருக்கிறீர்களா? தேவன் தம்முடைய வேளையில் இறங்கி உங்களை கட்டாயம் விடுவிப்பார். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்த தேவன் புதிய ஏற்பாட்டில் கல்வாரி உடன்படிக்கை மூலமாக விடுவிக்க வல்லவராயிருக்கிறார். ஏனென்றால் அவர் வாக்குத்தத்தம் மாறாத உடன்படிக்கையின் கர்த்தர்.

இன்றும் தேவன் பலநூறு வருடங்களாக அடிமைத்தனத்தி–ருக்கும் நம் தேசத்தை தேவன் கண்ணோக்கிப் பார்க்கிறார். எத்தனையோ வருடங்கள், தலைமுறைகள் கடந்து விட்டது என்று நினைக்கலாம். ஆண்டவரின் வருகை மிக சமீபமான இந்த நாட்களில் ஆவியானவர் நம் தேசத்தில் இறங்கி வந்துள்ளார். ஜாதி, ஜாதியாக தம்மண்டை இழுத்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் அவர் வாக்குத்தத்தம் மாறாத உடன்படிக்கையின் கர்த்தர்.

**அழைக்கப்பட்ட தேவ ஊழியர்கள்**

தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற ஒரேப் பர்வதம் மட்டும் ஆடுகளை மேய்த்துக் கொண்டு கடந்த கால வாழ்வின் ஏமாற்றங்களை

நினைத்து சிந்தித்துக் கொண்டிருந்த மோசேக்கு தேவன் தரிசனமாகி பெயர் சொல்– அழைத்தார். நான் எம்மாத்திரம் என்று தன்னை உணர்ந்த மோசேயை கொண்டு தேவன் அற்புத அடையாளங்களுடன் இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்தார். அதுபோல் யுத்தங்களைச் செய்யும்படியாக யோசுவாவையும் தேவன் பேர்சொல்– அழைத்தார். சத்துருவின் கோட்டைகளையும் ராஜ்ஜியங்களை தகர்க்கவும் தேவ ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தவும் தெரிந்து கொண்டார்.

நாம் வாழும் காலம் இது மோசேக்கள், யோசுவாக்கள் எழும்பும் காலம். நம் தலைமுறை மோசே, யோசுவாக்களின் தலைமுறை. தேவன் இந்தியா முழுவதும் ஊழியர்களை , மிஷனெரிகளை, ஸ்தாபனங்களை உருவாக்கி பயன்படுத்தி வருகிறார். சிவகாசியை சேர்ந்த நான் தொழில் செய்து முன்னேற வேண்டும் என்று உலகத்தின் பாதையில் சென்ற அடியேனை என் 20ஆம் வயதில் பெயர் சொல்– அழைத்தார். **ஒரு ஜாதி மக்களை தருவேன்** என்று எங்கள் திருமணத்திற்கு பின்பு வாக்குத்தத்தம் பண்ணினார். பீல் ஜாதிகள் மத்தியில் கொண்டு சென்றார். பிசாசின் பிடியிலும், குடியிலும், அமிழ்ந்து சண்டையிடுவது, கொள்ளையடிப்பது போன்ற பாவங்களில் கட்டப்பட்ட அடிமைத்தனத்தி–ருந்து அற்புத அடையாளங்களுடன் தேவன் ஆயிரம் ஆயிரமாய் ஜனங்களை விடுவிக்கிறார். அழைத்தவர் உண்மையுள்ளவர்.

அதுமட்டுமல்ல, தேவன் மோசேக்கு யோசுவாவுடன் யுத்தம் செய்யும் மனிதர்களை கொடுத்தது போல் இன்றும் நம் தேசத்திலுள்ள அந்தந்த ஜாதிகளில் சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பி உள்ளார். நம் பீல் சுதேச ஊழியர்கள் 432 பேர் கிராமம் கிராமமாகச் சென்று சத்துருவின் கோட்டைகளை தகர்த்து தேவனண்டையில் மக்களை இழுத்து வருகிறார்கள். இது யோசுவாக்களின் தலைமுறையாகும். தேவன் தாமே சுதேச ஊழியர்களை, யோசுவாக்களைப் போல பயன்படுத்த ஜெபிப்போம்.

### அமலேக்கியர் யுத்தம்

இஸ்ரவேல் ஜனங்கள் ரெவித்தீமிலே வந்து சேர்ந்தார்கள். அப்போது அமலேக்கியர் இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள். அமலேக் தேவனுக்கு விரோதமானவன். ஏசாவின் தலைமுறையில் வேசித்தனத்தில் பிறந்தவன். அவன் சந்ததி துஷ்டனுடைய சந்ததி. (ஆதி. 36:9–12) அமலேக்கியர் தேவ ஜனமாகிய இஸ்ரவேலருடன் யுத்தம் செய்து அவர்களை மனங்கலங்க பண்ண வேண்டும். பின்னோக்கி விரட்ட வேண்டும் என்று திட்டமிட்டனர். தேவனோ

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்கு அழைத்து செல்ல விரும்புகிறார். சத்துருவாகிய அமலேக்கியனோ அவர்களை கலங்கச் செய்து பின்னடைய வைக்க செய்கிறான். ஆனால் அழைத்த தேவனோ **யெகோவாநிசி.** முன் நின்று யுத்தத்தை நடத்துகிறவர். **ஜெயத்தை கொடுக்கிறவர்.** அல்லேலூயா.

தேவ ஜனமே நம்மை பாவத்தி–ருந்தும், அக்கிரமக் கட்டுகளி–ருந்தும் விடுவித்த ஆண்டவர் பரம கானானுக்கு நம்மை அழைத்துச் செல்ல விரும்புகிறார். நம்முடைய ஊழியத்தின் பாதையிலும், வாழ்க்கைப் பாதையிலும் சில நேரங்களில் ஆண்டவருடைய அற்புதமான உன்னதமான வழிநடத்துத–ல் இருந்தும் நம்மை சோர்வடைய செய்து ரெவிதீமிலே நம்மை மடங்கடிக்கச் செய்வதுதான் சாத்தானின் திட்டம். ஆனால் தேவ பிள்ளையே நம்முன் **யேகோவாநிசியாகிய** ஆண்டவர் யுத்தம் செய்வார். முன்னேறிச் செல்வோம்.

இந்த அமலேக்கியர் யுத்தத்தில் இரு காரியங்களை நாம் பார்க்கிறோம். கண்கள் காணத்தக்கதாக யோசுவா அமலேக்கிய யுத்த வீரர்களுடன் பட்டயத்துடன் போராடுகிறார். ஆனால் மோசே மலையுச்சியில் எறி சென்று தேவனுடைய கோலை பிடித்துக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள். (யாத். 17:10,11) இது ஒரு ஆவிக்குரிய யுத்தமாகும். ஊழியத்திலும், வாழ்க்கையிலும், சில வேளைகளில் இப்படிப்பட்ட போராட்டங்கள் வருகிறது. அப்போது கண் காணத்தக்கதாய் பிரச்சனைக்கு முடிவுகள் எடுக்கிறோம். ஆனாலும் ஆவிக்குரிய யுத்தம் ஒன்று உண்டு. தேவ பிரசன்னத்தில் நாம் காத்திருந்து ஆவியில் நிறைந்து அமலேக்கு என்ற சத்துருவை முறியடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் உலக பிரகாரமாக எடுக்கும் பிரயாசங்கள் தோல்வியடைந்து விடும். ஜெபிப்போம். வாழ்க்கையில், ஊழியத்தில் நமக்கு எதிராக உள்ள அமலேக்கை ஜெயிப்போம்.

**தாங்கும் ஊழியத்தில் ஆரோனும் ஊரும்**

இந்த அமெலேக்கியர் யுத்தத்தில் **யேகோவாநிசியாகிய** தேவன் வெற்றி சிறக்க வைத்தார். எனினும் ஒரு முக்கியமான காட்சியை இந்த யுத்தத்தில் பார்க்கிறோம். மோசே மலையுச்சியில் தேவனுடைய கோலை கையிலே ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள். ஆனால் மோசேயின் கைகள் தாழ விழுகையில் அமலேக்கு மேற்கொண்டான். (யாத்.17:11) அப்போது தேவ தாசனாகிய மோசேயின் கைகள் அசந்து போயிற்று என்று வாசிக்கிறோம். இதை கண்டவுடன் ஆரோனும், ஊரும் ஒரு கல்லை கொண்டு வந்து மோசேயை அமர வைத்து இரு கைகளையும் தாங்கிப் பிடிக்கிறார்கள். அதன் மூலமாக

இஸ்ரவேலர் வெற்றியை சுதந்தரித்தார்கள். தாங்கும் ஊழியத்தை ஒரு வேளை ஆரோனும், ஊரும் செய்யாம—ருந்தால் அமலேக்கு மேற்கொண்டிருப்பான். வல்லமையாக தேவனால் பயன்படுத்தப்பட்ட தாசனாகிய மோசேயின் கைகள் அசந்தபோது தாங்கும் மனிதர்கள் தேவைப்பட்டார்கள்.

நம் தேசத்தில் தேவன் போதகர்கள், ஊழியர்கள், ஸ்தாபனங்கள் மற்றும் ஊழியங்கள் மூலமாக ஆயிரம் ஆயிரம் ஆத்துமாக்களை விடுவித்து வருகிறார். இந்நாட்களில் மோசேக்கு நேரிட்டதுபோல அநேக மிஷனெரிகள், ஊழியர்கள், குறிப்பாக ஸ்தாபனத்தின் தலைவர்களின் கைகள் அசந்து போகிறது. தேவன் அழைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் அவர்களும் மனிதர்கள் தானே. விசுவாசிகள், சபை மக்களாகிய நாம் தான் அவர்கள் வீழ்ந்து போவதை காணாதபடி தாங்க வேண்டும். ஆண்டவர் ஆரோன், ஊர் செய்த காரியங்களை உங்கள் மூலமாக செய்ய விரும்புகிறோம்.

நம் ஊழியத்தின் கடந்த 16 ஆண்டுகளாக தேவன் மாபெரும் அறுவடையைத் தந்து அற்புத அடையாளங்களுடன் நடத்தி வருகிறார். 185 கிராம ஆலயங்களையும், 432 சுதேச ஊழியர்களையும் தேவன் தந்துள்ளார். அவருக்கே மகிமை உண்டாவதாக. ஆனால் பீல் ஆதிவாசிகளை தேவனண்டை வழி நடத்திச் செல்லும்போது ஊழியப்பாதையில் இந்நாட்களில் எழும்புகின்ற பிரச்சனைகள் பல உண்டு. அந்தகாரங்கள் மத்தியிலும், பல எதிர்ப்புகள் மத்தியிலும் பொருளாதார நெருக்கடி மத்தியிலும் சுதேச ஊழியர்களை உருவாக்கும் கடினமான பணி மத்தியிலும் சபைகளை குறித்த பாரங்கள் மத்தியிலும் எங்கள் கைகள் அசந்து போகிறது. இதை வாசிக்கின்ற அருமையான சகோதர, சகோதரியே ஆத்தும பாரத்துடன் உங்களை ஆரோன், ஊர் இவர்களைப் போல் எங்களுக்காக ஜெபிக்கவும், தாங்கவும் உற்சாகப்படுத்தவும் உங்களை வேண்டுகிறோம். இந்திய தேசத்தில் ஊழியம் செய்கிற போதகர்கள் ஊழியர்கள் மிஷனெரிகளை தாங்கும்படி தேவன் உங்களுக்கு கிருபை செய்வாராக.

*தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவார்கள்.* இயேசுவின் வாக்கின்படி உங்களுக்கு ஆசீர்வாதங்களை தருவாராக. இறுதியாக **யேகோவாநிசியாகிய** ஆண்டவர் நம் தேசத்தில் மக்களை விடுவிக்கும் மிஷனெரி பணியில் முன்னோடியாய் போர்புரியும் யோசுவாக்கள் போன்ற ஊழியர்களுடன் நாம் ஆரோன், ஊர் இவர்களைப் போல ஜெபிப்போம். தாங்குவோம். ஆமென்.

## மார்ச் மாத ஊழியங்களுக்காக தேவனை துதியுங்கள் !

✯ 01.03.2008 அன்று ஷாலோம் சுதேச ஊழியர்கள் தலைவர்கள் மனைவிமார்கள் சிறப்பு ஜெபக்கூடுகை "தாகோத்தில்" நன்றாக நடைபெற தேவன் கிருபை தந்தார். சகோதரி. வஹிதா தேவதாஸ் சிறப்பாக ஆவியானவரின் நிறைவுடன் நடத்த கிருபை தந்தார்.

✯ சென்னையி–ருந்து SIM ஊழியத்தி–ருந்து **சகோ. ஜெபராஜ்** அவர்கள் நம் சுதேச ஊழியர் 126 பேர்களுக்கு ரூ.40,000 செலவில் ஹிந்தியில் நிறை வாழ்வு வேதாகமம் வழங்க பணித்தளம் வந்தார்கள். அவர்கள் 3 நாட்கள் ஊழியர் கூட்டத்திலும் பங்கெடுத்து தேவசெய்தி அளித்தார்கள். அவர்களுக்காகவும், வேதாகம உதவி செய்த தேவ பிள்ளைகளுக்காக தேவனை துதிப்போம்.

✯ அவர்களுடன் மும்பையி–ருந்து **சகோ. எபனேசர் சாமுவேல்** குடும்பமாக வந்து 02.03.2008 அன்று குஜராத் கங்கேலா ஆலயத்தில் வருகை தந்து செய்தி அளித்து பீல் மக்கள் ஊழியத்திற்காக தேவனை துதித்தார்கள். சகோ. ஜெபராஜ் அவர்கள் உஸ்வானியா பணித்தளத்திற்கு சென்று ஆலய ஆராதனையில் பங்கெடுத்தார்கள்.

✯ மார்ச் 3, 4, 5, 6 தேதிகளில் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஊழியர்கள் கூடுகை மிக அபரித ஆசீர்வாதத்துடன் நடைபெற்றது. குறிப்பாக அப்பம் பிட்குதல் ஆராதனை பக்தியுடன் நடைபெற்றது. அனைவர் மீதும் கல்வாரி அன்பு ஊற்றப்பட்டது. தேவனுக்கே மகிமை.

✯ **Pas. Amos** அவர்கள் (A.G. சபை, மார்த்தாண்டம்) மூன்று பேராக குழுவாக வந்து மார்ச் 5, 6, 7 நாட்களில் பணித்தளத்தில் ஊழியங்களை நடத்தினார்கள். குஜராத்தில் பாவ்கா கிராம ஆலயத்தில் மூப்பர்கள் கூடுகை மற்றும் மத்தியபிரதேசத்தில் வட்டா கிராம ஆலயத்தில் சுகமளிக்கும் விடுதலை ஆராதனைகளும், இராஜஸ்தானில் டிம்பேடாபடா கிராம ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தும் ஷாலோம் ஆரம்பப்பள்ளி மற்றும் மாணவர் விடுதியையும் பார்வையிட்டார்கள்.

தேவன் அவர்களை பயன்படுத்தி ஆசீர்வாதமாக பீல் மக்களுக்கு வைத்தார். அவர்கள் சபை மூலமாக கட்டி தந்த சபைக்காக தேவனை துதியுங்கள்.

☆மார்ச் 7, 8 மற்றும் 10, 11 தேதிகளில் இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 120 சபைகளுக்கு Sunday School Teachers Training Programme தாகோத் பயிற்சி கூடத்தில் நடைபெற்றது. சிறுவர்களை தேவணன்டை நடத்துவோம் என்று ஆத்துமபாரத்துடன் அனைவரும் புறப்பட்டு சென்றார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் மற்றும் Training Unit ல் அனைவரும் சிறப்பாக திட்டமிட்டு, நேர்த்தியாக நடத்தினார்கள்.

☆மார்ச் 9–ம் தேதி சென்னையில் நான் (Bro.V. Devadoss) குரோம்பேட்டை JEMS சபையில் பங்குபெறவும், **Bishop தயானந்தன்** அவர்களுடன் ஊழியங்களை பற்றி ஆலோசனைகளை பெற தேவன் கிருபை தந்தார். 10–ம் தேதி தேசிய அளவில் நடைபெற்ற National Prayer & Church Transformation Initiative கூடுகையில் பங்கு பெற தேவன் கிருபை தந்தார்.

☆மார்ச் 16ம் தேதி கோவையில் உள்ள **Pr. ஜோயல் அனந்தராஜ்** அவர்களை சந்தித்து 100 சுதேச ஊழியர்கள் போதகராக அபிஷேகம் செய்யப்பட உள்ள பயிற்சி கூட்டத்தினைக் குறித்து திட்டமிட தேவன் உதவிச் செய்தார்.

## ***ஷாலோம் ஊழிய தற்போதைய திட்டங்களும் தேவைகளும்:–***

1 ஷாலோம் **VBS** ஊழியங்கள், பரிசுத்த ஆவியானவரின் ஏவுத–ன்படி இவ்வருடம் நம் பீல் ஆதிவாசி விசுவாசிகள் பிள்ளைகள் 20,000 பேர்களுக்கு எளிய நடையில் வேத அறிவை கற்றுக் கொடுக்க நாமே 20,000 VBS புத்தகங்களை தயாரித்து அச்சிட தீர்மானித்துள்ளோம். 400 சபைகளில் 20,000 விசுவாச பிள்ளைகள் கர்த்தரில் பலப்பட ஜெபியுங்கள். புத்தகங்கள் அச்சிட, Director,Teachers Training மற்றும் 10 நாட்கள் வேதாகம பள்ளி நடத்துவதற்கான தேவைகள் பின் தொடர்பணி இவைகளுக்காக, நிதிஉதவி **ரூ.4 இலட்சம்** கிடைக்கப்பெற ஜெபியுங்கள். ஒரு

பிள்ளைக்கு ரூ.20/–வீதம் 20,000 பிள்ளைகளுக்கு நிதிஉதவி தேவை ஜெபித்து, தாங்க முன்வாருங்கள்.

2 **100 ஷாலோம் போதகர்கள் அபிஷேக ஆராதனை**

கர்த்தருக்கு சித்தமானால் ஏப்ரல் மாத இறுதியில் தெரிந்துகொள்ளப்பட்ட 100 சுதேச ஊழியர்களுக்கு முதன் முறையாக போதகர்களாக அபிஷேகம் செய்யப்பட உள்ளார்கள். அதற்காக அந்த 100 ஊழியர்களுக்கு சிறப்பு போதகர் பயிற்சி முகாம் ஏப்ரல் 7–12 வரை 6 நாட்கள் ஆனந்த் பட்டணத்தில் நடத்த உள்ளோம். தமிழ்நாட்டி–ருந்து மூத்த போதகர்கள். ஊழியர்கள் வந்து இந்த பயிற்சி கொடுக்க உள்ளார்கள். முகாமிற்கான உணவு ஏற்பாடு, போக்குவரவு செலவுக்காக **ரூ.2 இலட்சங்கள்** தேவை. மேலும் ஊழியர்களுக்காக சிறப்பு வெள்ளை அங்கிகள் தைக்கப்படவும் வேண்டும். பயிற்சி முகாம், ஆராதனை சிறப்புடன் நடைபெறவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

3 நம்முடைய இராஜஸ்தான் பிஜல்பூர் பள்ளி மற்றும் விடுதிக்காக தண்ணீர் வசதி செய்யப்பட Motor, Tank, Pipe Fitting இவைகளுக்காகவும், சிறிய சமையல் அறை கட்டப்பட 260 பிள்ளைகளுக்கு சமையல் செய்ய நல்ல பாத்திரங்கள் மற்றும் அவசிய சாமான்கள் வாங்கப்பட **ரூ.70,000/–** தேவைப்படுகிறது.

4 இராஜஸ்தான் கோய்க்கா கிராம 30 அனாதை பிள்ளைகளுக்கு சரியான தங்கும் வசதி இல்லை. **ரூ.70,000/–** செலவில் விடுதி அறைகள் (Hostel) தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

5. குஜராத் ஹிரோலா கிராமத்தில் கடந்த 15–ம் தேதியன்று சுவிசேஷத்திற்கு விரோதமாய் செயல்படும் நபர்கள் ஆலயத்திற்குள் நுழைந்து அங்குள்ள பொருட்களையெல்லாம் சேதப்படுத்தியுள்ளார்கள். உடனடியாக போலீஸ் வந்து சேதப்படுத்திய அனைவரையும் கைது செய்துள்ளார்கள். ஆகவே மேலும் இந்த கிராமத்தில் பிரச்சனைகள் வராதபடி தேவன் பாதுகாத்து கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஷாலோம் பத்திரிக்கை வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துதலை தெரிவிக்கிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த பிப்ரவரி மாதம் 14–ம் தேதி ஷாலோம் பணித்தளத்திற்கு நானும் எனது அன்பு நண்பர் **போதகர் பிரேம்குமார்** அவர்களும் சென்றோம். குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெப்ரவரி 14–ம் தேதி முதல் 17–ம் தேதி வரை இரண்டுபேரும் சேர்ந்து ஊழியங்கள் செய்தோம். பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடக்கும் ஷாலோம் ஊழியத்தை பார்வையிடும்படி ஆண்டவர் கிருபை செய்தார். சகோ. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் இருவரும் கடந்த 16 வருடங்களாக இந்த ஊழியத்தை அற்புதமாக செய்து வருகின்றனர். வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத பீல் ஆதிவாசி மக்கள் ஆண்டவரை ஆராதிப்பதையும் அன்பு கூர்வதையும் கண்டு மகிழ்ச்சியடைந்தோம். இருளில் இருந்த ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்தபின் அவர்களின் வாழ்க்கை முறை மாறியிருப்பதை பார்த்து பெரும் மகிழ்ச்சி அடைந்தோம். எந்த ஒரு வசதியும் இல்லாத அந்த பகுதிகளில் சென்று ஊழியம் செய்வது மிகவும் கடினமான காரியம். ஆனால் கர்த்தரின் பெரிதான கிருபையினால் சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் இருவரும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதைக் கண்டு ஆச்சரியமடைந்தோம். தேவன் தந்த தரிசனத்தை அடைய அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும், ஜெபமும் மிகவும் அதிகம். கொள்ளையர்களாக, மந்திரவாதிகளாக, சாராயம் காய்ச்சுகிறவர்களாக இருந்தவர்களை புதிய மனிதர்களாக மாற்றி இருக்கிறார்கள். பீல் இன மக்கள் எங்களை நாகரீகத்துடன் அன்பாக வரவேற்று உபசரித்தவிதம் எங்களை மிகவும் கவர்ந்தது. அதற்காக சகோதரி அவர்கள் அடிக்கடி பயிற்சி கொடுக்கிறார்கள். சுத்தமாக இருப்பதைப் பற்றி குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பது போல் எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்கிறார்கள். ஹரேந்திரகட் (இராஜஸ்தான்), சன்னாடா, சோட்டா உதய்பூர் (குஜராத்), ஹக்வானி, மூண்டத் (மத்தியபிரதேசம்) ஆகிய பகுதிகளிலுள்ள ஆலயங்களில் ஊழியம் செய்ய கர்த்தர்

கிருபை செய்தார். பயத்துடனும் நடுக்கத்துடனும் தேவனை ஆவியில் நிறைந்து ஆராதித்தனர். பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் கிரியைகளையும், பெரிய காரியங்களையும் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

Shalom School, Bijalpur மற்றும் Hostel ஆகியவற்றை பார்வையிட்டோம். தேவன் தாமே பிள்ளைகளை பாதுகாத்து அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து வருகிறார். பீல் இன மக்கள் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் பரவிக் கிடக்கிறார்கள். இரவு பகல் பார்க்காமல் சகோதரரும், சகோதரியும் உழைக்கிறார்கள். இதினிமித்தம் அநேக ஆயிரம் பீல் இனமக்கள் இந்த குறுகிய வருடங்களில் ஆண்டவரின் அன்பை அறிந்திருக்கிறார்கள்.

அன்பான ஷாலோம் பங்காளர்களே! ஒரு கோடி மக்களுக்கு சுவிஷேசம் அறிவிக்கப்பட்டு, பல ஆயிரங்கள் முழுமையாக ஆண்டவரை அறிந்துள்ளார்கள். இன்னும் அறிவிக்கப்படவேண்டும், தேவைகள் அதிகம், விரைவாக இவைகள் சந்திக்கப்பட, ஆத்துமாக்கள் ஆதாயப்பட ஊழியர்கள் பாதுகாக்கப்பட கருத்துடன் ஜெபியுங்கள். உதாரத்துவமாக கொடுத்து தாங்குங்கள். நிச்சயமாகவே ஷாலோம் ஊழியங்கள் பீல் இனமக்கள் மத்தியில் ஒரு சரித்திரத்தை உருவாக்கும். என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தேவாதி தேவன் இயேசுவுக்கே மகிமை!

**– சகோ. ஜெபசிங் சந்தோஷம்,**

பவானிசாகர், ஈரோடு மாவட்டம்

**எங்களுடன் தொடர்பு கொள்ள**


தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

**Pr. ஆமோஸ்** (A.G. சபை, மார்த்தாண்டம்) அவர்கள் குழுவினரோடு மார்ச் 06,07,08 ஆகிய நாட்களில் பணித்தளத்தை பார்வையிட வந்திருந்தார்கள். மேலும் இராஜஸ்தான் மாநிலத்தில் டிம்பேடாபடா கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்கள்.

















**Pr. ரெயின்ஹார்டு சந்திரசேகர்,** கோவை, அவர்கள்
நம் பணித்தளத்தை பார்வையிட வந்திருந்தார்கள்.



















சகோ. ஜெபராஜ் (SIM ஊழியம், சென்னை) அவர்கள்
126 சுதேச ஊழியர்களுக்கு ரூ. 40,000 செலவில் ஹிந்தி நிறைவாழ்வு
வேதாகமங்கள் பணித்தளத்திற்கு வந்து வழங்கினார்கள். (மார்ச் 02&03)







ஊழியர்கள் கூட்டத்தில் கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூரும் வண்ணம்
இராப்போஜன ஆராதனை மார்ச் 03,04,05,06 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.









**Pr. பிரேம்சிங்** மற்றும் **சகோ. ஜேபசிங் சந்தோஷம்** (சத்தியமங்கலம்) அவர்கள் பிப்ரவரி 15,16,17 ஆகிய நாட்களில் பணித்தளத்திற்கு வந்து பார்வையிட்டார்கள்.










## பணித்தளங்களை பார்வையிட்ட போதகரிடமிருந்து....

குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய பகுதிகளில் வசிக்கும் பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்களின் சார்பில் நடைபெறும் ஊழியங்களை நேரடி பார்வையின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் சார்பாக நடைபெற்று வரும் ஊழியங்களை குறித்து சில வருடங்களுக்கு முன் அறியவும் ஷாலோம் ஊழிய ஸ்தாபகர் கனம் தேவதாஸ் அவர்கள் மூலமாக நேரடியாகவும் நாங்கள் கேள்விப்பட ஏதுவானது. அதுமுதல் சபையில் பீல் மக்கள் மத்தியிலுள்ள ஷாலோம் ஊழியங்களுக்காகவும், சகோ. தேவதாஸ் மற்றும் அவர் மனைவி சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுக்காகவும், அங்குள்ள சுதேச ஊழியர்களுக்காகவும் பாரத்துடன் ஜெபிக்கவும், ஏதாகிலும் எங்களால் இயன்றதை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தையும் கர்த்தர் கொடுத்ததால் சில வருடங்களாக 2 கிராம ஊழியத்தையும் மாதந்தோறும் தாங்க கர்த்தர் உதவி செய்து வருகிறார். இப்படியிருக்க 2007 ஜனவரி மாதம் சகோ. தேவதாஸ் அவர்களும் சில பீல் இன குடும்பங்களுமாக மார்த்தாண்டம் வந்த போது ஞாயிறு ஆராதனையில் எங்கள் சபையில் கலந்து கொண்டு அந்த மக்களையும் நேரடியாக அறிமுகம் செய்து தேவைகளை குறித்து அறிவித்து செய்தியளித்தார்கள். அன்றே நாங்கள் (மார்த்தாண்டம் A.G. சபையில்) பீல் மக்களுக்கென்று மிக தேவையான இடத்தில் ஒரு கிராம சபையை கட்டி கொடுக்க தீர்மானித்து கட்டி கொடுப்பதாக வாக்குபண்ணினோம். அதன்படி கர்த்தருடைய கிருபையால் அதற்கான பண உதவி ரூ.50,000 கொடுத்தோம்.

இந்த நிலையில் கடந்த 2.3.2008 ஞாயிறு மாலை நானும் சகோ. ஜெரோம், சகோ. ஸ்டீபன் (மகன்) சகோ. பீட்டர் ஷாரோன் ஆகியோராக புறப்பட்டு ஷாலோம் ஊழியத்தின் தலைமையிடமான குஜராத் மாநிலம், தாகோத் சென்றடைந்தோம். 5,6,7 ஆகிய மூன்று நாட்களும் பல கிராமங்களில் நடைபெறும் ஊழியங்களை பார்வையிட நேரடியாக அழைத்து செல்லப்பட்டோம்.

### ***5–ம் தேதி குஜராத் மாநிலம்***

காலை குஜராத் மாநிலம் தாகோத்தி–ருந்து 25 கிமீ பிரயாணம்பண்ணி ஷாலோம் ஊழியத்தின் ஆரம்ப ஊழியமான பாவ்கா என்ற கிராம சபையும் அங்கு ஒழுங்கு செய்திருந்த சிறப்பு ஆராதனையிலும் பங்குபெற்றோம். கரடுமுரடான பாதைகளில் பயணம் கடினமானதாக இருந்தாலும் மகிழ்ச்சியாயிருந்து. செய்தியளித்து அனைவருக்கும் தனிஜெபம் செய்து சாட்சிக்கான நேரம் கொடுக்கப்பட்ட போது அநேக அற்புதங்களை கர்த்தர் செய்ததாக சாட்சி பகிர்ந்தனர். அவைகளை விவரிக்க நேரம் போதாது தேவனுக்கே மகிமை. சமூகவிரோதிகளால்

இரண்டு முறை பிரச்சனை ஏற்பட்ட சபை என்றாலும் இன்று அதே சபை நிரம்பியிருக்க ஆத்துமாக்களை உடைய சபையாக வளர்ந்துள்ளது. அன்று மாலை தாகோத்தில் உள்ள பயிற்சி மையத்தில் நடைபெற்று கொண்டிருந்த இராஜஸ்தான் பகுதி ஊழியர்களின் மாதந்திர கூடுகை (சுமார் 90 ஊழியர்கள்) கலந்து கொள்ள கர்த்தர் உதவி செய்தார்.

***6–ம் தேதி இராஜஸ்தான் மாநிலம்***

காலை 4.15 மணிக்கு தாகோத்தி–ருந்து சுமார் 75 கிமீ பிரயாணம்பண்ணி இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பல கிராம சபைகளை நேரடியாக பார்த்து ஜெபிக்க, கும்புரா என்ற சபையில் 25 ஏழை மாணவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டோம். இராஜஸ்தானிலுள்ள Timmada Bada கிராமத்தில் எங்கள் சபை மூலமாக கட்டப்பட்டிருந்த ஆலய பிரதிஷ்டையிலும், சிறப்பு கூட்டத்திலும் செய்தியளித்து யாவருக்கும் ஜெபிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். பிஜல்பூர் கிராமத்தில் ஏழை மாணவர் சுமார் 350 மாணவர்களை பராமரித்து கல்விபுகட்டி வரும் ஷாலோம் ஊழியத்தால் நடத்தப்படும் Primary School பார்வையிட கர்த்தர் உதவி செய்தார். இங்கு சொந்த இடமும், கட்டிட வசதியும் தேவையாக உள்ளது. பின்பு டெபிரி கிராம சபையையும், போதகரையும் சந்தித்தோம். அத்துடன் ஜாலோத் என்ற இடத்தில் உள்ள பழைய அலுவலகத்தையும் பார்வையிட்டோம்.

***7–ம் தேதி மத்தியபிரதேசம் மாநிலம்***

வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பணித்தள அலுவலக தியான கூட்டத்தில் செய்தியளித்து ஜெபித்த பின் மத்தியபிரதேச மாநிலத்தில் உள்ள வட்டா என்ற கிராம சபையில் ஒழுங்கு செய்திருந்த சிறப்பு ஆராதனையில் பங்கெடுத்து சிறப்பு செய்தியளித்து ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். ஜெப முடிவில் பலர் அற்புத விடுதலை பெற்றதாக சாட்சி பகிர்ந்தனர். தாகோத் திரும்பும் வழியில் குஜராத்தில் உள்ள நகரேலா என்ற கிராம சபைக்காக பாரத்துடன் ஜெபித்தோம். இத்தனை கிராமங்களை சந்தித்தாலும் இங்கு மட்டும் தான் மின்சாரவசதியை பார்க்க முடிந்தது. எல்லா சபைகளிலும் அவர்கள் பாரம்பரிய முறையில் பூ மாலை போட்டு வரவேற்பளித்தனர். எல்லாவற்றையும் நேரடியாக பார்த்த போது அதிக பாரம் ஏற்பட்டது. இன்னும் அதிகமாக செய்யவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. செய்ய முயற்சிக்கிறோம் ஜெபியுங்கள். விஷேசமாக தியாகத்துடன் தங்களை முழுவதுமாக பீல் மக்களுக்காக தங்களை அர்ப்பணித்து சீராகவும், சிறப்பாகவும் இந்த பரம தரிசனத்தை நிறைவேற்றி வரும் அப்போஸ்தலர் **கனம் தேவதாஸ் அவர்களையும், மனைவி வஹிதா தேவதாஸ்** அவர்களையும் இன்னும் வல்லமையாக கர்த்தர் பயன்படுத்துவாராக. அழைத்து பயன்படுத்தி அன்பாய் உபசரித்த அவர்களுக்காகவும், விசேஷமாக எங்களோடிருந்து உதவிய சகோ.சாமுவேல், குஜராத் அவர்களுக்கும் மிக்க நன்றியுடையவர்களாயிருக்கிறோம்.

– போதகர். ஆமோஸ், (மார்த்தாண்டம் A.G. சபை)

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **சாரோன் B. பாரியா** |
| தகப்பனார் பெயர் | : | பதமிலால் பாரியா |
| தாயார் பெயர் | : | தாவ்ரி |
| பிறந்த நாள் | : | 22–12–1998 |
| படிக்கும் வகுப்பு | : | II Std. |
| சொந்த ஊரின் பெயர் | : | கோடா |
| தாலூகா | : | பான்ஸ்வாடா |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| தங்கி படிக்கும் விடுதி | : | Bijalpur |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

சாரோன் B. பாரியாவின் தகப்பனார் பதாமிலால் பாரியா கோடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இவளுடைய தகப்பனின் திருமணத்தின் போது சிலர் இவருக்கு விரோதமாக மந்திரவாதிகளின் மூலமாக மந்திர சக்திகளை ஏவினபடியினால் 3½ வருடங்களாக நோயினால் மிகவும் வேதனைப்பட்டார். நோய் சுகமாவதற்காக மருத்துவமனைக்கு மந்திரவாதிகளிடமும் சென்றுள்ளார். எங்கும் சுகம் கிடைக்கவில்லை. 1996–ல் அவள் தகப்பனாருக்கு ஒரு ஊழிய சகோதரர் மூலம் இயேசுவை அறிய வாய்ப்பு கிடைத்தது. இயேசுவை விசுவாசித்து ஊழியர் இவருக்காக ஜெபித்தவுடன் தேவன் இவள் தந்தையைத் தொட்டு சுகம் கொடுத்தார். குடும்பமாக இயேசுவை விசுவாசித்தனர். இரட்சிக்கப்பட்டனர். பிறகு இவளுடைய தகப்பனார் பாதமிலால் பாரியா பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று பாரத்துடன் கடினமான விரோதங்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

சாரோன் பாரியா நன்றாக படிப்பாள். வேத வாசிப்பில் ஆர்வம் உண்டு. நன்றாக பாடல் பாடி நடனமாடுவாள்.

**ஜெபியுங்கள்:-**

நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தை தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் : Mr. Arunlal,** Pudukottai.

(இந்த சிறுமியைப் போல் இன்னும் 296 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

## களச்செய்திகள்...

**துதியுங்கள் (குஜராத்)**

- கலா–யாவுட் கிராம சபையில் கடந்த மாதம் நடைபெற்றஞாயிறுஆராதனையில்570 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 5 குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 45 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- தேவ்கட் கிராம சபையில் கடந்த மாதம் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 250 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 3 குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 55 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- நன்டுகான் கிராம சபையில் உபவாச ஜெபம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விசுவாசிகள் அனைவரும் உற்சாகத்தோடு கலந்து கொண்டார்கள்.
- புரக்குவா கிராம சபையில் கடந்த மாதம் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 470 பேர்கள் கலந்துகொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறுப்பள்ளியில் 100 பிள்ளைகள் கலந்துகொண்டார்கள்.

**ஜெபியுங்கள் (குஜராத்)**

- நெல்சூர் கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்படும்படியாகவும், இந்த வருடத்தில் சபையில் தேவன் 100 குடும்பங்களையும், சபையில் 12 மூப்பர்களையும் தரும்படியாகவும்...
- புரக்குவா கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்படும்படியாகவும், வகேலா கிராமத் தலைவர் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக....
- ரூண்டி கிராம சபையில் புதிதாக அநேக ஆத்துமாக்களை தேவன் தரும்படியாகவும், சபையில் தேவன் 100 குடும்பங்களை தரும்படியாக...
- ஜெரி கிராமத்தில் 100 பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கென புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Children Development Programme திட்டத்திற்காக...

**துதியுங்கள் (இராஜஸ்தான்)**

- மஸ்காபாடா கிராமத்தில் 2 பேர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.
- குண்டா கிராம சபையில் கடந்த மாதம் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 276 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 2 பேர்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 62 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- கோய்க்கா கிராமத்தில் கடந்த மாதம் 5 குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு புதிதாக ஆலயத்திற்கு வந்தார்கள்.புதிதாக 10 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 50 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- தாட்கா கிராம சபையில் கடந்த மாதம் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 280பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 1

குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 50 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.

**ஜெபியுங்கள்** **(இராஜஸ்தான்)**

- ☞ கும்புரா கிராமத்தைச் சேர்ந்த சோம்லா, ரமேஷ், ரமன் இவர்கள் ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாகவும், பாபு, லால்சிங், ஜெகதீஸ், ராமு, சகன், பரத், மான்சிங் இவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.
- ☞ இட்டாலா கிராமத்தைச் சேர்ந்த பாபுலால் என்ற சகோதரருக்கு 2 வருடமாக கண்பார்வையற்று உள்ளார்கள். தேவன் சகோதரருடைய கண்களில் பார்வையை தரும்படியாக...
- ☞ மஸ்காபாடா கிராமத்தில் சங்கர்பாய் என்ற சகோதரருக்கு வியாதியி–ருந்து தேவன் சுகத்தை கொடுக்கும்படியாக...

**துதியுங்கள்** **(மத்தியபிரதேசம்)**

- ❁ அந்தர்வே–யா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 645 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 3 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.
- ❁ லபானிபாடா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 340பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 14 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- ❁ குட்டாயா சபையில் கடந்த மாதம் நடைபெற்ற ஆராதனையில் 335 பேர்கள் கலந்துகொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறுப்பள்ளியில் 25 பிள்ளைகள் கலந்துகொண்டார்கள். 8 புதிய குடும்பங்கள் வந்தனர்.

**ஜெபியுங்கள்** **(மத்தியபிரதேசம்)**

- ☞ ஜாபுவா என்ற இடத்தில் ஆலயம் கட்டுவதற்காக இடம் வாங்க முழு பணத்தேவைகளையும் தேவன் சந்திக்கும்படியாக...
- ☞ கேடி கிராமத்தில் தண்ணீர் கஷ்டம் நீங்கும்படியாகவும், ஆக்பவா கோதா என்ற இடத்தில் இருக்கிற விரோதிகள் காளாபிபோல் என்ற கிராமத்தில் உள்ள விசுவாசிகளுக்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக...
- ☞ ஹரிநகர் கிராமம் பிசாசின் பிடியில் உள்ளது. மேலும் கல்சிங்பாய், கோர்சிங்பாய், சுக்லாபாய், நாத்துபாய், வர்சிங்பாய், லக்ஷ்மன்பாய், பாதாபாய், சகன்பாய், பாலுபாய்,பாவ்சிங்பாய், மகுபாய் என்ற சகோதரர்கள் ஊழியத்திற்கு விரோதமாய் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாகவும் ஜெபியுங்கள்.

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. தால்சிங் சங்காடா** **ருண்டி (குஜராத்)**

களியா தால்வா கிராமத்தைச் சேர்ந்த மங்காபேன் என்ற சகோதரி 6 வருடங்களாக பிசாசின் பிடியில் இருந்தாள். அநேக மருந்துகள் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் விடுதலை இல்லை. இந்நிலையில் இந்த சகோதரியின் குடும்பத்தார் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆலயத்திற்கு வந்து ஜெபித்த போது பிசாசின் பிடியி–ருந்து தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. கோர்சிங் டாமோர்** **புரக்குவா (குஜராத்)**

அமிஸா என்ற புரக்குவா கிராமத்து 7 வயது மகள் 1 வருடமாக நடக்க முடியாமல் இருந்தாள். மகளின் பெற்றோர் ஆலயத்திற்கு கொண்டு வந்து ஜெப எண்ணெய் பூசி விசுவாசத்தோடு ஜெபித்தபோத தேவன் மகளுக்கு சுகத்தை கொடுத்தார்.

**சகோ. கன்னுபாபோர்** **மால்வாசி (குஜராத்)**

மால்வாசி கிராமத்தைச் சேர்ந்த ஜெஸ்ஹிங் பாய் என்ற சகோதரர் மனநிலை சரியில்லாமல் இருந்தார். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சகோதரரை நம்முடைய ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் இந்த சகோதரருக்காக ஜெபித்தேன். தேவன் ஜெபத்தை கேட்டு ஒரே வாரத்தில் இந்த சகோதரருக்கு தேவன் தெளிவான மனநிலையை கொடுத்தார்.

**சகோ. ரத்தன்சிங் டாமோர்** **கலாசியா (குஜராத்)**

செனியாபாய் என்ற சகோதரர் பிசாசின் பிடியினால் சிக்குண்டு மரணப்படுக்கையில் இருந்தார். நாங்கள் விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சகோதரருக்கு பிசாசின் பிடியி–ருந்து விடுதலைக் கொடுத்தார்.

**சகோ. பத்தியா கராசியா** **கும்புரா (இராஜஸ்தான்)**

ஹக்ரிபேன் என்ற கும்புரா கிராமத்து சகோதரி கால் செயல் இழந்து நடக்க முடியாமல் காணப்பட்டாள். நான் இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாய் நடக்கும்படி கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை

**சகோ. வஜ்ஹிங் வாசுனியா** **மூவாலா (இராஜஸ்தான்)**

ஜித்தாபேன் என்ற சகோதரிக்கு பிசாசு பிடித்திருந்தது. இந்த சகோதரியை கட்டி சபைக்கு கொண்டு வந்தார்கள். சபையில் பாட்டுபாடி ஆராதித்து வசனங்களை சொல்– ஜெபித்த போது பிசாசின் போராட்டத்தி–ருந்து சகோதரிக்கு தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. தாவ்ரா மெய்டா** **காக்கன்வானி (இராஜஸ்தான்)**
ஜாம்கு என்ற சகோதரிக்கு 6 வருடமாக காது கேட்காமல் மிகவும் கஷ்டப்பட்டாள். ரூ.1,000 செலவு செய்து மருத்துவம் செய்தும் சரியாகவில்லை. இந்த சகோதரியை நம்முடைய சபைக்கு அழைத்து வந்து ஜெபித்த போது காது கேட்க தேவன் கிருபை செய்தார்.

**சகோ. வில்–யம் டாமோர்** **ஜீவகூட்டா (இராஜஸ்தான்)**
வீர்ஜிபாய் என்ற 60 வயது சகோதரர் 3 வருடமாக ஆஸ்துமா வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சகோதரர் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜெபித்த போது சகோதரருக்கு தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. சர்தார் B. டாமோர்** **பத்தியபாடி (மத்தியபிரதேசம்)**
தாவ்ரிபேன் என்ற சகோதரி ஆஸ்துமா வியாதியினால் 15 வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டாள். அதிக பணம் செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்த சகோதரியை ஆலயத்திற்கு அழைத்து வந்து ஜெபித்த போது ஆஸ்துமா வியாதியி–ருந்து தேவன் பூரண சுகத்தை கொடுத்தார்.

**சகோ. ரத்தன்சிங் பத்வீரா** **அந்தர்வே–யா (மத்தியபிரதேசம்)**
பித்தாபேன் என்ற சகோதரி விக்கிரக வணக்கமுடையவளாய் இருந்தாள். இவள் இரத்தப்போக்கு வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டாள். அதிக பணம் செலவழித்து மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் எந்த பலனுமில்லை. இறுதியில் நமது சபை ஆராதனைக்கு வந்தார்கள். நான் அவர்களுக்காக ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு முற்றிலும் சுகம் கொடுத்தார்.

**சகோ. நான்சிங் நாரியா சௌகான்** **அந்தாரிவாட் (மத்தியபிரதேசம்)**
ஜாவான்சிங் என்ற சகோதரர் வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. பின்பு இந்த சகோதரரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். (தேவன் என்னுடைய மனைவிக்கு தரிசனம் கொடுத்து “ஜாவான்சிங் சகோதரருக்காக ஜெபி, நான் சுகம் கொடுப்பேன்” என்றார்) நாங்களும் இந்த சகோதரருக்காக ஜெபித்த போது தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. ஹிம்ராஜ் பாபேரியா** **காலவட்டா (மத்தியபிரதேசம்)**
கைலாஷ்பாய் என்ற சகோதரர் கண்பார்வை சரியாக தெரியாமல் இருந்தது. இதனால் மிகவும் கஷ்டமாக இருந்தது. இந்த சகோதரர் ஆலயத்திற்கு வந்து இயேசுவை விசுவாசித்து ஜெபித்த போது சகோதரருக்கு தெளிவான கண்பார்வையை தேவன் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.



# யோனத்தான் கோபோர்த்

மிஷனெரி முன்னோடிகள்

1859ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் நாள் பிரான்சிஸ் கோபோர்த்துக்கும் ஜேன் பேட்ஸ் அம்மையாருக்கும் ஏழாவது மகனாக பிறந்த குழந்தைதான் யோனத்தான் கோபோர்த். ஐந்து வயதினிலேயே அவ்வம்மையார் தன் மகனை தனக்கு சங்கீத புத்தகத்தி—ருந்து சங்கீதங்களைப் படித்துக் காட்ட செய்வாராம். யோனத்தான் ஏழு வயதாயிருக்கும்போது அவருக்கு ஓர் அம்மையார் அழகிய வேதாகமம் ஒன்றைப் பரிசாகத் தந்தார். இது வேதாகமத்தைப் படிப்பதில் அதிக ஊக்கம் தந்தது. யோனத்தான் தன் வாழ்நாளில் வேதாகமத்தை எழுபது முறைக்கு மேலாக வாசித்து முடித்திருந்தார். தனது பதினேழாவது வயதில் யோனத்தான் தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தார். அந்நாட்களில் ராபர்ட் மர்ரே மச்செயின் என்பவர் எழுதிய "ஞாபக குறிப்புகள்" என்ற நூலை வாசிக்க நேர்ந்தது. தானும் அவரைப் போலவே ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக தன் வாழ்வைச் செலவிட தீர்மானித்தார்.

1887 ஆம் ஆண்டு யோனத்தான் – ரோச—ண்ட் திருமணம் நடந்தது. "தன் ஆண்டவரையும் அவருடைய பணியையும், தன் மனைவிக்கும் மேலாக முதன்மையாகக் கொள்ளுவதற்கு அனுமதியளிக்கவேண்டும் என்னும் வாக்கை தன் மனைவியிடம் பெற்றுக் கொண்டார். கோபோர்த்தை சீனாவுக்கு தங்க் அருட்பணியாளராக அனப்ப கனடிய பிரஸபிட்டேரியன் சபை தீர்மானித்தது. ஆகையால் 1888ஆம் ஆண்டு ஜனவரி 10ம் தேதி நள்ளிரவில் கோபோர்த் தம்பதியினர் டொரான்டோ புகைவண்டி நிலையத்தி—ருந்து புறப்பட்டனர். அவர்களுடைய பணித்தளத்தின் தலைமையிடம் செஃபூ என்ற நகரில் அமைக்கப்பட்டது.

1887ஆம் ஆண்டு பங்க்ச்வானியி—ருந்து —ன்சிங் என்னும் ஊரில் குடியேறினர். இது சுகாதாரக் கேடான ஊர். அங்கு இரத்தபேதி நோய் பரவியது. அதன் விளைவாக கோபோர்த் தம்பதியரின் முதற்குழந்தை ஜெர்ட்ரூட் மாட—ன் மரித்துப்போனாள். அயல் நாட்டினரைப் புதைப்பதற்கான கல்லறைத் தோட்டம் அங்கு இல்லாததால் யோனத்தான் அக்குழந்தையின் சடலத்தை ஐம்பது மைல்களுக்கு அப்பாலுள்ள பங்க்ச்வானிற்கு கொண்டு சென்று நல்லடக்கம் செய்தார். "எங்கள் அருமை குழந்தையை எடுத்துக் கொண்டதற்கு ஆண்டவருக்கு ஒரு திட்டம் இருந்திருக்க வேண்டும். மரணத்தின் மீது வெற்றி கொண்ட இயேசு கிறிஸ்துவைப் பற்றி கோடானு கோடி சீனர்களும் அறிய வேண்டும் என்பபே இவர்களுடைய ஜெபம்.

தனது பகுதியிலுள்ள சிற்றூர் ஒன்றைத் தெரிந்து கொண்டு அங்கு தங்குவதற்கு வீடொன்றை அமர்த்திக் கொண்டு, தனது குடும்பத்தாருடனும், உதவியாளர் ஒருவருடனும் ஒரு மாதமாகிலும் அந்த ஊரில் தங்கியிருந்து ஒவ்வொருநாள் காலையிலும் மாலையிலும்

அவ்வூரிலும் அருகிலுள்ள ஊர்களிலும் தெருத் தெருவாகச் சென்று அருட்செய்தியை அறிவிப்பார்கள். பின்னர் அடுத்த ஊரில் முகாமிடுவார்கள். ஆண்டவருடைய வேலையை நாம் உண்மையுடன் செய்தால் அவர்தாமே நமது குழந்தைகளையும், குடும்பத்தையும் காத்துக் கொள்வார் என்று கோபோர்த் கூறினார்.

1906ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் சுன்சீன் என்னும் திருவிழாவில் கலந்து கொண்ட இலட்சக்கணக்கான சீன மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். சாங்குடி பகுதியில் "தீவிர அருட்பணி" ஊழியம் செய்தனர். பயங்கரமான குளிரில், செங்கற்களாலான படுக்கையில், மிகவும் பலமாகக் கடிக்கும் பூச்சிகள் மத்தியில் அவர்கள் படுத்துறங்குவது அன்றாட நிலையாயிருந்தது. பட்டாளத்து வீரர்களுக்குப் பணியாற்றி 960 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். டாவோதானில் தங்கள் வீடு ஜெப அறையாக மாற்றப்பட்டது. ஜெபக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள்ளாக ஏறத்தாழ 400 பேர் விசுவாசித்து ஞானஸ்நானத்திற்காக ஆயத்தமாயினர்.

அருட்பணி உதவியாளருக்கான பயிற்சி நிலையம் நியூசாங் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது. தன் இரண்டு கண்களும் பாதிக்கப்பட்டு பார்வையற்றவரானார். நான் காணும் அடுத்த முகம் என் இரட்சகருடைய முகமாகத்தான் இருக்கும் என்று கூறினார். அக்டோபர் 8ம் நாள் 1936ஆம் ஆண்டு தான் அன்பாக நேசித்து சேவை செய்த தன் எஜமானருடைய சமூகத்தில் பிரவேசித்து விட்டார்.


**FORM IV**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of it's Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadoss |
| 7. | Address | : | 5/168, Caldwell Colony,<br>3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadoss |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date : 30.03.2008 signature of Publisher

## நாட்டு நடப்புச் செய்திகள்....

பிப்ரவரி மாதம் 25 தேதி கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 59 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றபோது இலங்கை கடற்படையினரால் கடத்தப்பட்டார்கள். இதன்பின் இந்திய அரசும், தமிழக அரசும் மீனவர்களை மீட்க மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இலங்கை கடற்படை மீனவர்களை விடுவித்தது. சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கையில் தலை மன்னாரைத் தாண்டிச் சென்றதற்காக இவர்களை கைது செய்தோம் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

---

மூன்று நாடுகள் பங்கு பெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 02.03.2008 அன்று சிட்னி, ஆஸ்திரே–யாவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆஸ்திரே–யாவை இந்தியா 6 விக்கட் வித்தியாசத்தில் தோற்கடித்து கோப்பையை கைப்பற்றியது. இந்தப்போட்டியில் சச்சின் டெண்டுல்கர் தனது 42வது சதத்தை அடித்தது மிகப்பெரிய சாதனையாகும். டெண்டுல்கள் ஆஸ்திரே–ய மண்ணில் அடித்த முதல் சம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

கடலுக்கு அடியில் இருந்து புறப்பட்டு வானில் உள்ள இலக்கை தாக்கும் கே–15 என்ற நவீன ஏவுகனையை இந்திய கடந்த மாதம் சோதனை நடத்தி வெற்றி கண்டது. இந்த ஏவுகனை 700 கீ.மீ. தூரம்வரை பறந்து சென்று எதிரிகளின் விமானங்களைத் தாக்கும் சக்தி கொண்டது. இதற்கு முன் இந்த ஏவுகனை அமெரிக்கா, ரஷியா, பிரான்சு, சீனா ஆகிய நான்கு நாடுகளிடம் மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

சுவிஸ் நாட்டு நிறுவனம் ஒன்று உலகிலேயே அதிக வேகத்தில் செல்லக்கூடிய வாகனம் ஒன்றை உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் வேகம் மணிக்கு 340 மைல் ஆகும்.

---

கியூபா நாட்டின் அதிபராக ரால் காஸ்ட்ரோ பொறுப்பேற்றுள்ளார். இதற்கு முன்னதாக பதவிவகித்த இவரது அண்ணன் பிடல் காஸ்ட்ரோ கடந்த 50 ஆண்டுகளாக ஆட்சி செய்தார். இவருடை உடல் பலவீனமான காரணமாக இவர் பதவியி–ருந்து ஓய்வு பெற்றார்.

---

இஸ்ரேல் நாட்டில் ஜெருசலேம் நகரில் உள்ள ஒரு பள்ளிக் கூடத்திற்குள் ஒரு பாலஸ்தீன தீவிரவாதி நுழைந்து 8 மாணவர்களை சராமாரியாக சுட்டுக் கொலை செய்தான். பின்னர் இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்த தீவிரவாதி ப–யானான்

–நன்றி தினத்தந்தி




மத்தியபிரதேசம் மாநிலத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் மேக்நகர் தாலுகாவிலுள்ள மிகவும் உள்ளடங்கிய கிராமம் பத்தரா. இங்கு வாழும் மக்கள் குடிப்பதும், திருடுவதும், இறந்தவர்களின் ஆவிகளை தெய்வமாக வணங்குவதும், வியாதிகள் ஏற்பட்டால் மந்திரவாதிகளை நாடுவதும் இவர்களுடைய பழக்கத்தில ருந்தது. இயேசு கிறிஸ்துவை பற்றி சிறிதும்கூட அறியாதவர்கள். இந்த பழக்கங்களில ருந்து வந்தவர்தான் சகோ. மான்சிங் புரியா.

சகோ. மான்சிங் புரியாவின் மனைவி வியாதினால் பாதிக்கப்பட்டு பல மாதங்களாக மரண படுக்கையில் காணப்பட்டார். இதில ருந்து விடுதலை பெற மந்திர பூஜைகள் செய்தும், மருத்துவமனைக்குச் சென்றும் எந்த பலனுமில்லை. ஷாலோம் ஊழியத்தைப் பற்றி கேள்விப்பட்டு அந்தர்வேல யாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆலய ஆராதனைக்கு தன் மனைவியை அழைத்துச் சென்றார். தன் மனைவியை தொடர்ந்து 20 நாட்கள் ஆலயத்தில் வைத்து தானும், சபை ஊழியரும் ஜெபித்து வந்தனர். தேவன் அவருடைய மனைவிக்கு வியாதியி–ல ருந்து பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். முழுகுடும்பமும் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். சகோ. மான்சிங்புரியாவின் உறவினர்களும் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். தனது வீட்டிலேயே சகோ. மத்தூர்புரியா மூலமாக கூட்டத்தை ஆரம்பித்தார். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே சகோ. மான்சிங் புரியா தனது நிலத்தை கொடுக்கவே அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தற்போது சகோ. காளுபாய் குந்தியா சபை ஊழியராக இருந்து வருகிறார். 30 குடும்பங்கள் ஆலயத்திற்கு வருகிறார்கள். இந்த கிராம ஆலயத்தை புத்தளத்தைச் சார்ந்த Mr. Arul Sam Dennis அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியால் தேவ நாம மகிமைப்பட கட்டப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை












01.12.2007 அன்று வால்பாறையைச் சேர்ந்த இம்மானுவேல் ஜெப ஊழியம் சபை போதகர் ஏசையாஸ் அவர்கள் தலைமையில் சகோ. நான்சிங் சௌகான் (மத்தியபிரதேசம்) அவர்களின் பிரதிஷ்டை ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சகோ. வே. தேவதாஸ் அவர்கள் மிஷனெரி செய்தியளித்தார்கள். கூட்டத்தில் ஊழியர்களுக்கு 2 சைக்கிள்கள் மற்றும் 5 பெட்ரோமாக்ஸ் விளக்குகள் வழங்கப்பட்டன.





பிப்ரவரி 09,10 ஆகிய நாட்களில் டால்பியாபுரம் ஏ.ஜி. சபையில் போதகர் சம்பத்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் சகோ. வே. தேவதாஸ் & சகோதரி வஷிதா தேவதாஸ் மிஷனெரி செய்தி கொடுத்தார்கள்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss